மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 142/2019**

2024ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ஆம் தேதி வியாழக்கிழமை

பி.வா.சா.1 (ரத்தினக்குமார்)

கு.வி (வாதி தரப்பில்)

வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளார். எதன் அடிப்படையில் பாகப்பிரிவினை கோரியுள்ளார் என்றால் எனது தாயார் பொன்னம்மாளும் வாதியின் தாயார் அம்மனியம்மாளும் உடன்பிறந்தவர்கள் என்பதன் அடிப்படையில் பாகம் கோரியுள்ளார். எனது தாயார் பொன்னம்மாள் மற்றும் வாதயின் தாயார் அம்மனியம்மாள் ஆகியோர் கன்னுச்சாமியின் வாரிசுகள் என்றால் சரிதான். கன்னுச்சாமிக்கு ஆண் வாரிசுகள் கிடையாது என்றால் சரிதான். தாவா 9வது இலக்க சொத்தான சர்வே எண்.98/2 கன்னுச்சாமிக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றால் கன்னுச்சாமிக்கு 1 ஏக்கர் 19 செண்டு மட்டும் தான் பாத்தியம், மீதமுள்ள 2 ஏக்கர் 38 செண்டு 2ம் பிரதிவாதியின் தந்தையை பெற்ற தகப்பனார் சுப்பையா கோனாருக்கு பாத்தியப்பட்டது. 1969க்கு முன்னர் 9வது இலக்க சொத்தான சர்வே எண்.98/2 யார்பெயரில் இருந்தது என்றால் 09.12.1954ல் 300 ரூபாய்க்கு செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் சுப்பையா கோனாரும், அவரது சகோதரர் தங்கசாமி கோனாரும் 1.581.24 என்ற நம்பர் சொத்தை டிரஸ்டியாக பயன்படுத்தி வந்தார்கள். செட்டில்மெண்ட் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆவண எண்.2454/1954 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 09.12.1954ல் மானாமதுரை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 2454.٠.1954 ஆக வெள்ளைசாமி கோனார் மகன்களாகிய சுப்பையா கோனார் மற்றும் சுப்பையா கோனாரின் தம்பி தங்கசாமி கோனார் ஆகிய இருவரும் தாவா 9வது இலக்க சர்வே எண். 98.٠.2ல் புஞ்சை தாக்கு 1க்கு குறுக்கம் 76 விஸ்தீரணம் என்று மானாமதுரையிலிருந்து மதுரை போகிற ரஸ்தாவில் மேற்படி 9ம் இலக்க சொத்தினை அவர்கள் இருவரும் நடத்தி வந்த மேற்படி சொத்திலிருந்த தண்ணீர் பந்தல் தர்மத்திற்காக டிரஸ்ட் பாத்தியம் மூலம்

பாத்தியப்படுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகள் சம்பந்தமாக மேற்படி இருவரால் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின் உண்மைத்தன்மையை மறைத்து வழக்கு தோதிற்காக தாவா 9வது இலக்க சொத்து தண்ணீா பந்தல் தர்மத்திற்காக இனாமாக எழுதிகொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்கண்ட 1954ம் வருடத்தின் பத்திரத்திலும் தண்ணீர் பந்தல் தர்மத்திற்காக பாத்தியப்படுத்தி இருப்பதால் மேற்படி சொத்தில் இருந்து வரக்கூடிய வருமானத்திலிருந்து தண்ணீர் பந்தல் தர்மத்தை அவர்கள் இருவரும் நடத்தி வந்தார்கள் என்றும், அவர்களது ஆயுளுக்கு பின்னர் மேற்படி தர்மத்தை மேற்படி இருவரின் வாரிசுகள் சந்ததி பரம்பறையாக நடத்தி வரவேண்டியது என்றும், மேற்படி சொத்திலிருந்து வரக்கூடிய வருமானத்திலிருந்து மேற்படி தண்ணீர் பந்தல் தர்மத்தின் உபயோகத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படும் சிப்பந்தி சம்பளம் தண்ணீர் வைக்கும் பாத்திரங்கள், தயிர் போன்றவைகள் வாங்குவதற்காகவும் அதில் இருக்கும் கட்டிட பராமரிப்பிற்காகவும் பயன்படுத்த வேண்டும் வேறு எவ்விதமான செலவுகளும் செய்யக்கூடாது என பத்திரத்தில் எழுதியுள்ளது என்றால் சரியல்ல. மேற்கண்டவாறு பத்திரத்தில் குறிப்பிடபட்டுள்ளது சர்வே எண்.98/2யை அபகரிக்கும் நோக்கத்தில் அவ்வாறு இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 9வது இலக்க சொத்து சர்வே எண். 98/2 செட்டில்மெண்ட் காலத்தில் சுப்பையாகோனார் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். செட்டில்மெண்ட் பட்டா தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 ஆவணத்தில் 9வது இலக்க சொத்தான சர்வே எண். 98/2 ஆனது செட்டில்மெண்ட் காலத்தில் 74 பட்டாவில் வெள்ளைசாமி கோனார் மகன் சுப்பையா கோனார்-1, முத்துகோனார் மகன் கன்னுச்சாமி கோனார்-2 என கண்டுள்ளது என்றால் கண்டுள்ளது, முத்துகோனார் மகன் கன்னுச்சாமிக்கு மேற்கு புறம் 1 ஏக்கர் 19 செண்ட், மீதமுள்ள 2 ஏக்கர் 38 செண்ட் சுப்பையா கோனாருக்கு பாத்தியப்பட்டது. வா.சா.ஆ.9 ஆவணத்தில் எதன் அடிப்படையில் மேற்படியார் பெயர்களில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் வாரிசுகூட்டு என்று கண்டுள்ளது என்றால் கண்டுள்ளது ஆனால் அது தவறு. சர்வே எண். 98/2 முன்பாத்தியஸ்தர் முத்துகோனார் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். முத்துக்கோனார் வழியில் அவரது மகனான கன்னுச்சாமி கோனாருக்கு மட்டும் பாத்தியமான தாவா சர்வே எண்.98/2 ஆன 9வது இலக்கத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் சுப்பையா கோனார் செயல்பட்டு செட்டில்மெண்ட் காலத்தில்

மோசடியாக சுப்பையா கோனாரின் பெயரை இணைத்து வைத்துள்ளார் என்றால் சரியல்ல. கன்னுச்சாமி கோனாருக்கு மட்டும் முழுவதும் பாத்தியமான தாவா 9வது இலக்க சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் எவ்வித ஆவண ஆதாரங்களும் அனுபவமும் இல்லாத சுப்பையா கோனாரும் தங்கசாமி கோனாரும் 09.12.1954 அன்று தண்ணீர் பந்தல் தர்மத்திற்கென மோசடியாகவும் பொய்யாகவும் பத்திரம் பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை, நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் தான் சொன்னேன். வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் உள்ள உறவுமுறைகள் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்கரையில் 6வது பத்தியில் தாவா சொத்துக்களில் சில சொத்துக்கள் முத்துக்கோன் மகன் கன்னுச்சாமி என்பவருக்கு தனித்து பாத்தியமானது என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 9வது இலக்க சொத்தான சர்வே எண்.98/2 எனது தந்தை சுப்பையா கோனாருக்கு பாத்தியமான சொத்து என்பதற்கு 1வது இலக்க ஆவணமான விடுதலை பத்திரத்தில் 1.581.2454/54 ஆக மேற்படி சொத்தை நாங்கள் இருவரும் டிரஸ்டியாக நடத்தி வருவது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பின் 09.07.1964ல் நாம் இருவரும் பர்மாவில் இருக்கும் போது என்னால் தங்களுக்கு மேற்படி சொத்து சம்பந்தமாக பூரண மேனேமெண்ட் சம்பந்தமாக எழுதிகொடுக்கப்பட்ட முச்சரிக்க சம்பந்மாக மானாமதுரை டி.எம் கோர்ட்டில் என் பெயரில் பிராது தாக்கல் செய்ததாகவும் அதன்பின்னர் பிராது வழக்கு விசாரணை படி எனக்கு பாதகமாக தீர்ப்பானதின் பேரில் சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் ஏ.எஸ்.எண்.69/69 ஆக அப்பீல் செய்துள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட மேல்முறையீடு வழக்கு தரப்பினர்களாகிய எனது தாத்தா சுப்பையா கோனாருக்கும், அவரது சகோதரர் தங்கசாமி கோனாருக்கும் சமரசம் ஏற்பட்டு 18.07.1969ல் சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் சமரச மனு அடிப்படையில் ராஜினாமா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் தான் 19.07.1969 பி.வா.சா.ஆ.1 எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் கண்டுள்ள டிரஸ்ட் சம்பந்தமாக நடைபெற்ற வழக்குகளான ஓ.எஸ்.எண்.241/67, ஏ.எஸ்.எண்.69/69 தீர்ப்பு மற்றும்

தீர்ப்பாணையை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. மேற்கண்ட இரண்டு வழக்குகளும் தாவா 9வது இலக்க சர்வே எண்.98/2ல் 2 ஏக்கர் 38 செண்டுக்கு டிரஸ்ட் பாத்தியத்தின் அடிப்படையில் மட்டும் தான் நடத்தப்பட்டது என்றும், உரிமை கோரியோ, விளம்புகை கோரியோ மேற்கண்ட இரண்டு வழக்குகளும் நடத்தப்படவில்லை அதனால் தான் மேற்கண்ட இரு வழக்குகளின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை நகல்களை நீதிமன்றத்தில் முன்னிடவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. டிரஸ்ட் பாத்தியம் என்று தான் நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முத்துக்கோனார் வழியில் தங்கசாமி கோனாருக்கு மட்டுமே பாத்தியமான தாவா 9வது இலக்க சொத்தான சர்வே எண்.98/2 முழுமையுமாக அபகரிக்கும் நோக்கத்தில் தங்கசாமி கோனாரும் சுப்பையா கோனரும் செயல்பட்டு செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள முத்துக்கோனாரின் வாரிசான தங்கசாமி கோனாரும் சேர்த்து கூட்டு என்றும் வாரிசு என்றும் வெள்ளைசாமி கோனார் மகன் சுப்பையா கோனாரும் தனது பெயரை மோசடியாக பதிவு செய்து வைத்துள்ளார் என்றால் சரியல்ல. மேலும் தாவா 9வது இலக்க சொத்தை அபகரிக்கும் நோக்கில் தான் 09.12.1954 மற்றும் 19.09.1969 ஆகிய இரு பத்திரங்களும் ஓ.எஸ்.எண்.241/67 மற்றும் ஏ.எஸ்எண்.69/69 ஆகிய வழக்குகளும் தங்கசாமி கோனாரும் சுப்பையா கோனாரும் பதிவு செய்தும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கிற்காக சரியல்ல என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. டிரஸ்ட் சம்பந்தமாக 09.12.1954 மற்றும் 19.09.1969 ஆகிய தேதிகளில் தங்கசாமி கோனார் மற்றும் சுப்பையா கோனாரால் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் டிரஸ்ட்க்கு பாத்தியமான சொத்துக்களை எனது தாயாரான இறந்து போன 1ம் பிரதிவாதி பொன்னம்மாள், 2ம் பிரதிவாதியாகிய எனக்கும், 3, 4 மற்றும் 5ம் பிரதிவாதியான இறந்து போன தம்பி ராஜசேகரன் ஆகியோர்களுக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதிகொடுக்கவோ பாத்தியப்படுத்தி கொடுக்கவோ உரிமையில்லை என்றால் சரியல்ல. எனது தாயார் பொன்னம்மாள் என்பவர் எழுதிகொடுத்தவர் தானசெட்டில்மெண்ட் மற்றும் எனது பெயரில் எழுதிகொடுத்ததாக சொல்லப்படும் உயில் ஆகியவற்றில் கண்ட சொத்துக்கள் சம்பந்தமாக வருவாய்துறையில் எறபட்டுள்ள பட்டா மாறுதல் உத்தரவுகளோ பட்டாவோ கிஸ்தி ரசீதுகளோ எவ்விதத்திலும் எக்காலத்திலும்

செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. 9வது இலக்க சொத்தான சர்வே எண். 98/2ல் 1 ஏக்கர் 19 செண்ட் கன்னுச்சாமிக்கு என 1954 மற்றும் 1969 பத்திரங்களில் குறிப்பிட்டுள்ள பகுதியானது கன்னுச்சாமி கோனாரின் மகள்களான பொன்னம்மாள் மற்றும் அம்மனியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எதன் அடிப்டையில் சரியல்ல என்றால் கன்னுச்சாமி உயிருடன் இருக்கும் போதே 1 ஏக்கர் 19 செண்டை தனது இளைய மகளான பொன்னம்மாளுக்கு சீதனமாக கொடுத்துள்ளார். 1 ஏக்கர் 19 செண்டை கன்னுச்சாமி கோனார் எனது தாயாருக்கு சீதனமாக கொடுத்ததற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் பதிவு செய்யப்படாத இனாம் செட்டில்மெண்ட் எழுதிகொடுத்துள்ளார். பதிவு செய்யப்படாத இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தை நீதமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை எனறால் சரிதான், அது எனது தங்கையிடம் உள்ளது. 1 ஏக்கர் 19 செண்டு எனது தாயார் பெயரில் இறப்பதற்கு முன்னர் பட்டா ஏற்பட்டுள்ளதா என்றால் பட்டா எண்.227 உள்ளது அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். எனது தாயாருக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 55 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. தாவா சர்வே எண்.98/2 ஆனது எனது தகப்பனார் சுப்பையா கோனார் மகன் மருதானந்தம் என்ற பெயரில் இருந்து பட்டா எண்.227 ஆக எனது தாயாரான பொன்னம்மாள் பெயருக்கு 17.11.1994 அன்று தான் பட்டா ஏற்பட்டதாக பி.வா.சா.ஆ.6ல் கண்டுள்ளது என்றால் சரிதான். கன்னுச்சாமி கோனாரின் இளைய மகளான எனது தாயார் பொன்னமமாளுக்கு தாவா 9வத இலக்க சொத்து பாத்தியப்பட்டது என பி.வா.சா.ஆ,6 ஆவணத்தில் கண்டுள்ள 17.11.1994 அன்று தான் பாத்திப்பட்டது என உள்ளது, அதற்கு முன்னதாக தாவா 9வது இலக்க சொத்தில் 1 பகுதியான 1 ஏக்கர் 19 செண்ட் எனது தாயாருக்கு பாத்தியப்பட்டது என எவ்வித ஆவணமும் இல்லை என்றால் ஞாபகம் இல்லை. ஞாபகம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முத்துக்கேனார் வழியில் கன்னுச்சாமி கோனாருக்கு மட்டும் பாத்தியமான வாதிக்கும் சரிசம பாத்தியம் உள்ள தாவா 9வது இலக்க சொத்து முழுமையும் அபகரிக்கும் நோக்குடன் செயல்பட்டு தான் பி.வா.சா.ஆ.2 ஆவணமான 9வது இலக்க சொத்தை பொறுத்த கணக்குபிள்ளை தாக்கீதான பட்டா சிட்டா பற்றிய மாறுதலானது 29.01.1980 அன்றே சுப்பையா கோனார் மகன் வெள்ளைசாமி பெயரில் இருந்து மருதானந்தம் கோனார் தகப்பனார் பெயர் சுப்பையா என மோசடியாக பட்டா பதிவு செய்யப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல. நிலஉடைமை மேம்பாட்டு திட்டம் 1984, 1985 என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் 9வது இலக்க சொத்து முழுமையும் எனது தாத்தா சுப்பையா கோனாரின் தகப்பனாரான வெள்ளைசாமி கோனார் பெயரில் பட்டா எண்.227 இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4 ஆவணமான பட்டா மாறுதல் உத்தரவான தாவா 9வது இலக்க சொத்திற்கான ஆவணத்தில் எனது தாத்தாவின் தகப்பனரான வெள்ளைசாமி கோனார் பெயரிலிருந்து எனது தகப்பனார் பெயருக்கு 26.09.1996 அன்று மாறுதல் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ,4 ஆவணத்தில் எனது தகப்பனார் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டதாக கூறப்படும் 26.09.1996க்கு முன்னரே 15.04.1994 அன்று எனது தகப்பனார் பெயரில் வரி செலுத்தியதாக பி.வா.சா.ஆ.5ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வெள்ளைசாமி கோனாரோ, கன்னுச்சாமி கோனாரோ, தங்கசாமி கோனாரோ நேரடி வாரிசு இல்லை என்றால் சரிதான். எவ்வித ஆவண ஆதாரமும் உரிமையும் பாத்தியமும் இல்லாத நிலையில் செயல்பட்டு வாதிக்கு சரிசம பாத்தியமுள்ள 9வது இலக்க சொத்து முழுமையும் அபகரிக்கும் நோக்குடன் எனது தாயார் எனது தகப்பனார் உள்ளிட்ட அனைவரும் செயல்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா 9வது இலக்கசொத்து எனது தாயார் உயிருடன் இருக்கும் போதே 2 முதல் 5 பிரதிவாதிகளாகிய எங்களுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனார் இறக்கும் வரை 9வது இலக்க சொத்து எனது தகப்பனார் பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் 9வது இலக்க சொத்து முழுவதும் எனது தாயாருக்கு பாத்தியம் என்பதற்கு ஆவணம் எழுதிவைத்துள்ளாரா என்றால் இல்லை. எனது தகப்பனார் இறந்த பிறகு 9வது இலக்க சொத்து வாரிச அடிப்படையில் எனது தாயாருக்கு வந்தது என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்தபிறகு எனது தாயார் மட்டும் தான் வாரிசுதாரராராக இருந்தாரா என்றால் 2ம் பிரதிவாதியாகிய நான், 3, 4 மற்றும் 5 பிரதிவாதியின் கணவரும் எனது தம்பியுமான ராஜசேகரன் ஆகியோர்கள் எனது தகப்பனாரின் வாரிசுகள் ஆவோம். மேற்படி 5 பேரும் வாரிசாக இருக்கும் போது எனக்கும் மட்டும் எனது தாயார் தாவா 9வது இலக்க சொத்தை பொறுத்து எனது தந்தையின் வாரிசாகிய எங்களுக்குள் பாகப்பிரிவினை தான் செய்து கொள்ள வேண்டுமே தவிர எனது தாயார் எங்களுக்கு எழுதி வைத்துள்ள 14.02.2005 தேதியிட்ட இனாம்செட்டில்மெண்ட் பத்திரமான பி.வா.சா.ஆ.7 மற்றும் வாதி

தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.15 மற்றும் 17.12.2007 அன்று எனது தாயார் 3ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் அதே தேதியில் 4ம் பிரதிவாதி பெயரில் எழுதிவைத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் அதே தேதியில் 6ம் பிரதிவாதியின் கணவரான இறந்துபோன ராஜசேகரன் என்பவருக்கு எழுதிவைத்த பத்திரங்கள் வா.சா.ஆ.16, 17, 18 மற்றும் வா.சா.ஆ.18 அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ,19 முதல் 21 வரையிலான பத்திரங்கள் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. அவ்வாறு மேற்கண்ட ஆவணங்களை எழுதிவைத்த நபர்களுக்கு எழுதிகொடுக்க சட்டபூர்வ உரிமையில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ,7 ஆவணத்தில் சொத்து விபரத்தில் தவா 9வத இலக்க சொத்தான சர்வே எண்.98/2க்கு கிழக்கு பக்கம் தங்கசாமி கோனார் மகனும், முரளிகுமாரின் மனைவியுமான திலகவதி இனாம் செட்டில்மெண்ட் மூலம் அடைந்த புஞ்சைக்கு மேற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தவா 9வது இலக்க சொத்திற்கு கிழக்கே உள்ள சொத்து தங்கசாமி கோனாரின் பாகம் என்றால் சரிதான். தங்கசாமி கோனாரின் பாகம் என்று 9வது இலக்க சொத்தான சர்வே எண்.98/2க்கு கிழக்கு பக்கமுள்ள சொத்து தான் எனது தாத்தா வெள்ளைசாமி கோனாருக்கு பாத்தியமாக இருந்து பின்னர் எனது தாத்தா சுப்பையா கோனரும் அவரது சகோதரர் தங்கசாமி கோனாரும் அடைந்த சொத்து என்றால் சரிதான். வெள்ளைசாமி கோனாரின் சொத்து தாவா 9வது இலக்க சொத்திற்கு கிழக்கு பக்கம் உள்ள நிலையில் வெள்ளைசாமி கோனாருக்கு பாத்தியமான சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள கன்னுசாமி கோனாருக்கு மட்டும் பாத்தியமான தாவா 9வது இலக்க சொத்தை அபகரிக்கும் நோக்குடன் எனது தந்தைவழி முன்னோர்கள் செயல்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. உண்மையில் 9வது இலக்க சொத்து 1 ஏக்கர் 19 செண்ட் கன்னுசாமி கோனாரால் தனது இளைய மகளான பொன்னம்மாள் என்பவருக்கு சீதனமாக கொடுத்திருப்பின் மேற்படி சொத்தின் பட்டாவும் நேரடியாக பொன்னம்மாள் பெயரில் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தாவா 9வது இலக்க சொத்து முழுமையும் தந்தைவழி பாத்தியமான சொத்து என கண்டு பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.5 வரையிலான வருவாய்துறை ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன, அந்த வருவாய் துறை ஆவணங்கள் அடிப்படையில் பின்னீடு ஏற்படுத்தியுள்ள எந்த ஆவணங்களும் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா 2வது இலக்க சொத்தான சர்வே எண்.246/3 கன்னுசாமிக்கு பாத்தியமானது என

வா.சா.ஆ.2ல் கண்டுள்ளது என்றால் சரிதான். தாவா 2வது இலக்க சொத்தான சர்வே எண்.216/1, 216/2ம் கன்னுசாமிக்கு பாத்தியமானது என வா.சா.ஆ.3ல் கண்டுள்ளது என்றால் ஆரம்பத்தில் இருந்தது. அதே போல் தான் தாவா 4வது இலக்க சொத்தும் வா.சா.ஆ.4ல் கன்னுசாமி பெயரில் உள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் தான் தாவா 5வது இலக்க சொத்தும் வா.சா.ஆ.5ல் கன்னுசாமி பெயரில் உள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான், ஆதியில் இருந்தது. அதே போல் தான் தாவா 6வது இலக்க சொத்தும் வா.சா.ஆ.6ல் கன்னுசாமி பெயரில் உள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் தான் தாவா 7வது இலக்க சொத்தும் வா.சா.ஆ.7ல் கன்னுசாமி பெயரில் உள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் தான் தாவா 8வது இலக்க சொத்தும் வா.சா.ஆ.8ல் கன்னுசாமி பெயரில் உள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட தாவா 2 முதல் 8 மற்றும் 10 ஆகிய சொத்துக்களும் கன்னுசாமியின் வாரிசுகளான வாதியின் தாயார் அம்மனியம்மாள் மற்றும் எனது தாயார் பொன்னம்மாள் ஆகிய இருவருக்கு மட்டும் சரிசம பாகபாத்தியம் உள்ளது என்றால் சரிதான். எனது தரப்பு எதிர்வழக்குரையில் பக்கம் 6 பாரா 1,2ல் தாவா 1 முதல் 8 இலக்கசொத்துக்கள் மருதானந்தத்திற்கும் அவரது மனைவிக்கும்பாத்தியமானது என்றுள்ளது என்றால்ச ரிதான். மேற்கண்ட இருவருக்கும் மேற்படி 1 முதல் 8 இலக்க சொத்துகள் எவ்வாறு பாத்தியம் என காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தரப்பு எதிர்வழக்குரையில் பக்கம் 6ல் 5வரி முதல் 9வரி வரை 1வது பிரதிவாதியின் கணவர் மருதானந்தம் தான் அம்மனியம்மாளையும் அவரது கணவரான துரைராஜ் என்பவரையும் மற்றும் வாதியின் கணவரான மருது என்பவரையும் அவரது இறுதிகாலம் வரை பராமரித்து வந்தார் என்றால் சரிதான். அவ்வாறு பராமரித்து வருவது போல் போலியாக நாடகமாடி கன்னுசாமி பெயரில் உள்ள 9வது இலக்க சொத்து தவிர மற்ற அனைத்து சொத்துக்களையும் எனது தகப்பனார் மருதானந்தம், தாயார் பொன்னம்மாள் பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளது என்றால் சரியல்ல. வாதியின் தாயாரான அம்மனியம்மாளுக்கும் சரிசம பாகபாத்தியமுள்ள மேற்கண்ட சொத்தினை எனது தகப்பனார் மற்றும் தாயார் பட்டா மாற்றி கொண்டதற்கோ வருவாய் துறை ஆவணங்கள் ஏற்படுத்தி கொண்டதற்கோ எந்தவித சட்டபூர்வ உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. இந்த வழக்கானது சிவகங்கை சார்பு

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 03.07.2016க்கு பின்னர் பிரதிவாதிகள் பெயரிலோ மற்றவர்கள் பெயரிலோ பதிவு செய்யப்பட்டுள்ள குறிப்பாக பி.வா.சா.ஆ.9 முதல் பி.வா.சா.ஆ.22 வரையான எந்தவிதமான ஆவணங்களும் சட்டபடி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பழைய ராமநாதபுர மாவட்ட காவல்துறை அமைச்சு பணியில் தலைமை கண்காணிப்பாளாராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். அவ்வாறு உயரிய மாவட்ட பணியில் இருந்த எனது தகப்பனார் வாதிக்கு பாத்தியமான தாவா சொத்து முழுமையும் அபகரிக்கும் நோக்குடன் செயல்பட்டு பி.வா.சா.ஆ.2 முதல் 6 வரையான ஆவணங்களை வருவாய்துறையில் மோசடியாக மாற்றியுள்ளார் என்றால் சரியல்ல. தாவா 6, 7வது இலக்க சொத்துக்கள் யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. எனது தாயார் எழுதி வைத்த உயில் 03.08.2016 அதில் தாவா 6, 7 இலக்கசொத்து கண்டுள்ளதா என்றால் இல்லை. தாவா 1 முதல் 5 மற்றும் 10 சொத்துக்களை பொறுத்து எனது பெயரில் உயில் எழுதிவைத்துள்ள நிலையில், தாவா 6,7 இலக்க சொத்துக்களை மட்டும் உயிலில் குறிப்பிடாததற்கும் எனக்கு தனிப்பட்டு கொடுக்காததற்குமான தனிப்பட்ட காரணங்கள் என்ன என்றால் மேற்படி இரண்டு சொத்துக்களும் கூட்டுபட்டவாக இருந்த நிலையில் அதை உயிலில் எழுதவில்லை. கூட்டுபட்டா யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. V.கரிசல்குளம் கிராமத்தில் செய்களத்தூர் குரூப்பில் எந்தெந்த சொத்துக்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது, எனது தாயாருக்கும் எனது இறந்துபோன தம்பிக்கும் தான் தெரியும்.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை